ப

ஈழத்துத் தமிழ் அறிஞர்கள்: வாழ்வும் பணியும்

# ஆரம்ப அறிகைக்கான கையேடு

த. அஜந்தகுமார்

த. அஜந்தகுமார்
உதவி விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# மஹாகவி

ஈழத்து நவீன தமிழ்க்கவிதை முன்னோடிகளுள் மஹாகவி முக்கியமானவர். நவீன கவிதையின் உள்ளடக்கத்திலும் உருவத்திலும் இவர் புகுத்திய புதுமைகள் எண்ணிறந்தவை. யதார்த்த நெறியை கவிதையில் கையாண்டவர். சாதாரண மக்களின் அன்றாட வாழ்வைத் தனது கவிதைப் பொருளாகக் கொண்டவர். நவீன காவியங்கள், பா நாடகங்கள் ஆகியவற்றின் வளர்ச்சியில் பெரும்பங்கு வகித்தவர். பழைய யாப்பு வடிவங்களைப் பேச்சோசைப் பாங்கில் எளிமைப்படுத்தி, தற்கால உரைநடைக்குச் சமாந்தரமாக வளர்த்தவர். கிராமிய வழக்கு மொழியைக் கவிதையில் தாராளமாகக் கையாண்டவர். இத்தகைய காரணங்களால் ஈழத்து தமிழ்க் கவிதை வளர்ச்சியில் மஹாகவி முக்கிய இடம்பெறுகின்றார்.

மஹாகவி என்ற புனைபெயரை உடைய இவர் யாழ்ப்பாணத்திலே அளவெட்டி என்னும் கிராமத்திலே 09.01.1927 இல் பிறந்தார். இவரது இயற்பெயர் து. உருத்திமூர்த்தி. எழுதுவினைஞராக, நிர்வாக அதிகாரியாக, மாவட்ட காணி அதிகாரியாக, உதவி ஆணையாளராக பல உத்தியோகங்களில் இருந்தவர். மஹாகவி என்னும் பெயரைத் துணிச்சலோடு சூடிக்கொண்டவர். 1943இல் இருந்து இவரது கவிதைகள் பத்திரிகைகளில் பிரசுரமாகத் தொடங்கின. கிராம ஊழியன், மறுமலர்ச்சி, ஈழகேசரி, ஆனந்தன் போன்ற இதழ்களில் இவரது ஆரம்பகாலக் கவிதைகள் பிரசுரமாகின. சுமார் முப்பது ஆண்டுகள் கவிதைத் துறையை அவர் வளப்படுத்தினார். நூற்றுக் கணக்கான கவிதைகளும் இசைப்பாடல்களும் காவியங்களும் பா நாடகங்களும் சிறுவர் பாடல்களும் அவர் எழுதியுள்ளார்.

1960ஆம் ஆண்டின் பின்னர் ஒரு பெரிய பின்னணியில் வாழ்க்கையை நோக்கும் தன்மை மஹாகவியிடம் காணப்படுகின்றது. சடங்கு, ஒரு சாதாரண மனிதனது சரித்திரம், கந்தப்ப சபதம், கண்மணியாள் காதை ஆகிய காவியங்களையும் கோடை, முற்றிற்று, புதியதொரு வீடு முதலிய பா நாடகங்களையும் 60 இன் பின்னர் இவர் படைத்தார்.

இன்னவைதாம் கவி எழுத ஏற்ற பொருள் என்று பிறர்
சொன்னவற்றை நீர் திருப்பிச் சொல்லாதீர். சோலை, கடல்,

*த. அஜந்தகுமார்*

மின்னல், முகில், தென்றலினை மறவுங்கள். மீந்திருக்கும்
இன்னல், ஏழ்மை, உயர்வு என்பவற்றைப் பாடுங்கள்
என்று அறைகூவிய மஹாகவி

"இன்றைய காலத்திருக்கும் மனிதர்கள்
இன்றைய காலத்தியங்கும் நோக்குகள்
இன்றைய காலத் திழுப்புகள் எதிர்ப்புகள்
இன்றைய காலத் திக்கட்டுகள்"

ஆகியவையே கவிதையில் இடம்பெறவேண்டும் என்ற கவிக்கொள்கை உடையவராக விளங்கினார். அதாவது யதார்த்தப் போக்கே இவரது படைப்புகளின் அடிநாதம் ஆகும்.

இவர் கையாண்ட 'குறும்பா' வடிவம் இவருக்கு இன்னொரு பரிணாமத்தை வழங்கியது எனலாம்.

மஹாகவியின் வெளிவந்த நூல்களாக,
வள்ளி, குறும்பா, கண்மணியாள் காதை, கோடை, ஒரு சாதாரண மனிதனது சரித்திரம், வீடும் வெளியும், இரண்டு காவியங்கள், புதியதொரு வீடு, மஹாகவி கவிதைகள், மஹாகவியின் ஆறு காவியங்கள், மஹாகவியின் மூன்று நாடகங்கள், மஹாகவியின் குறும்பா + மாநிலத்துப் பெருவாழ்வு என்பன விளங்குகின்றன.

ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியில் தனித்துவமான ஒரு காலகட்டத்தைப் பிரதிபலித்தவர்களாக மஹாகவி, நீலாவணன், முருகையன் ஆகியோர் விளங்கினர். இதில் மிக முக்கிய ஆளுமையை மஹாகவி என்றும் நிலைத்து நிற்பார் எனின் மிகையில்லை.

# இணுவில் சின்னத்தம்பிப் புலவர்

இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் இணையிலாப் புலவர்கள் வரிசையில் நல்லூர் சின்னத்தம்பிப் புலவர், இணுவில் சின்னத்தம்பிப் புலவர், அல்வாய் சின்னத்தம்பிப் புலவர், உடுப்பிட்டி சின்னத்தம்பிப் புலவர் என்று பல சின்னத்தம்பிப் புலவர்கள் இருந்திருக்கிறார்கள். இதில் இணுவில் சின்னத்தம்பிப் புலவர் மிக முக்கியமான ஒருவர்.

இணுவில் சின்னத்தம்பிப் புலவர் இலங்கைக் கரையோரப் பிரதேசங்களை ஒல்லாந்தர்கள் ஆண்ட காலப்பகுதியில் தோன்றிய இவருக்கு கதிர்காமசேகரர் என்பதே இயற்பெயர். அப்பெயரோடு ஒல்லாந்த அதிகாரிகள் அளித்த மானா முதலியார் பட்டமும் சேர்ந்துகொள்ள கதிர்காமசேகர மானாமுதலியார் என அழைக்கப்பட்டார்.

சமயம் சார்ந்த பிரபந்தங்களையும் இசை நாடகங்களையும் எழுதிய வகையில் இவர் கவனிப்புப் பெறுகின்றார். சமயம் சார்ந்து இவர் ஆக்கிய பிரபந்தங்களாக பஞ்சவன்னத்தூது, சிவகாமியம்மைப் பதிகம், சிவகாமி அம்மைப் பிள்ளைத்தமிழ் போன்றன விளங்குகின்றன. இந்தப் பாடல்கள் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் துறைபோன தமிழ்ப்புலவராய் இணுவில் சின்னத்தம்பிப் புலவரை இனங்காட்டுகின்றன. பகைவர் சிலரால் சிறை வைக்கப்பட்டபோது இவர் சிவகாமியம்மையை சிந்தை இரங்கிப் பாடிய பாடல்கள் பத்திச்சுவை நிரம்பியவை. இவர் பாடிய பஞ்சவன்ன தூது அகப்பொருள் மரபின் உச்சத்தைத் தொடுகிறது. இளந்தாரி கோயிலில் எழுந்தருளியுள்ள கயிலைநாதரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட பஞ்சவன்னத் தூதில் நிலவு, தென்றல், கிளி, அன்னம், தோழி என ஐந்து பொருட்கள் தூதாக அனுப்பப்படுவதும் தலைவியான சந்திரமோகினியின் காதல் கவியும் இவ்விலக்கியத்தில் மிக அழகாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

முத்தமிழ் வல்ல இணுவில் சின்னத்தம்பிப் புலவர் நாடக நூல்களையும் ஆக்கி அளித்துள்ளார். இந்தவகையில் நொண்டி நாடகம், கோவலன் நாடகம், அனுவுருத்திர நாடகம் போன்றவை முக்கியமானவையாகும். ஈழத்து நாடக வளர்ச்சியில் ஒல்லாந்தர் காலப் பங்களிப்பில் இணுவில் சின்னத்தம்பிப் புலவரின் பாத்திரம் மறுதலிக்க முடியாத ஒன்றாகும்.

*த. அஜந்தகுமார்*

இவ்வாறாக ஒல்லாந்தர் காலப்பகுதியில் பிரபந்தங்கள் பாடியும் நாடகம் எழுதியும் தமிழ் தழைக்க பாடுபட்ட இணுவில் சின்னத்தம்பிப் புலவர் காலத்தால் அழியாது நிலைத்து நிற்பார்.

## நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்

18ம் நூற்றாண்டில் வாழ்ந்து தமிழ்ப்பணி செய்த புலவர்களுள் நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் முக்கியமானவர். வில்வராய முதலியாரது மகனான இவரது இயற்பெயர் செயதுங்கமாப்பாண முதலி என்பதாகும். இவரை எல்லோரும் சின்னத்தம்பி என்றே அன்போடு அழைத்தார்கள்.

சிறுவயதில் இவர் வாழ்வில் நடந்த சில சம்பவங்கள் இவர் புலமையின் உரைகற்களாகும்.

தமிழ்நாட்டு வித்துவான் ஒருவர் வில்வராய முதலியார் மீது பிரபந்தம் ஒன்றைப் பாடிக்காட்டி அவரிடம் பரிசுபெற அவரைத்தேடி நல்லூருக்குச் சென்றார். அவருடைய வீடு எங்கே இருக்கிறது என்பது அங்கே விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகளிடம் கேட்டபோது அவர்களோடு நின்ற சிறுவன் சின்னத்தம்பி,

பொன்பூச்சொரியும் பொலிந்த செழுந்தாதிறைக்கும்
நன்பூதலத்தோர்க்கு நன்னிழலாம் - மின்மரபை
வீசுபுகழ் நல்லூரான் வில்வராயன்றன்
வாசலிடைக் கொன்றை மரம்

என்று பாட்டாலே வீட்டிற்கு வழிகாட்டி வியக்கவைத்தான். அதேபோல் கல்வளை அந்தாதியின் காப்புச் செய்யுளைக் குறையிலே தந்தை விட்டுச்செல்ல அதை மிக அழகாக அவன் பாடிமுடித்தான் என்றும் பிறகு அவர் கேட்டதற்கிணங்க அவரே கல்வளை அந்தாதியை பாடி முடித்தார் என்றும் சொல்வர்.

இவர் பால பருவத்திலேயே பைந்தமிழ்ப் பாவலனாய் இருந்தமையினால் கல்வளை அந்தாதி, மறைசை அந்தாதி என்னும் இரு பிரபந்தங்களையும் பதினைந்து வயதிற்குள் பாடிமுடித்தார். அதன்பிறகு பறாளை விநாயகர் பள்ளு, நாலு மந்திரி கும்பி, கரவை வேலன் கோவை என்னும் நூல்களையும் இவர் படைத்தார்.

கல்வளை அந்தாதி கல்வளை விநாயகப் பெருமானின் மீது பாடப்பட்டது. பக்தி, அகம், இயற்கை அழகு முதலியன நயக்க இது பாடப்பட்டுள்ளது.

மறைசை அந்தாதி பயபக்தியோடு படித்தற்குரிய பாராயண நூல் போலவும் இலக்கிய, இலக்கணநயஞ் சிறக்கவும் பாடப்பட் டுள்ளது. திருமறைக்காட்டுத் தலப்பெருமை இதில் பாடப்பட்டுள்ளது.

கரவை வேலன் கோவை கரவெட்டி வேலாயுத முதலியாரின் புகழை 425 பாடல்களால் பாடிய இலக்கியமாகும். ஒவ்வொரு பாடலுக்கும் முதலியார் தேங்காயும் தங்க நாணயமும் வழங்கினார் என்பதன் மூலம் அவரது புலமைக்கு இருந்த மதிப்பு புலனாகிறது.

ஈழத்துச் செய்யுள் வரலாற்றில் நல்லூர் சின்னத்தம்பிப் புலவருக்கு என்றொரு தனித்த இடமுண்டு.

## சி. வை. தாமோதரம்பிள்ளை

19ம் நூற்றாண்டின் தமிழ் மறுமலர்ச்சியாளர்களுள் நாவலரோடு சேர்த்து விதந்தோதப்படும் வித்தகர்தான் சி. வை. தாமோதரம்பிள்ளை. வைரவநாதபிள்ளை பெருந்தேவியம்மா தம்பதியினர்க்கு மகனாக 1832 புரட்டாதி 9ம் நாள் பிறந்தார். தந்தையாரிடம் ஆரம்பக்கல்வியைக் கற்று சுன்னாகம் முத்துக்குமார கவிராயரிடம் உயர் இலக்கண இலக்கிய கல்வியைக் கற்றுக்கொண்டார். தெல்லிப்பளை அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் ஆங்கிலம் கற்றதோடு வட்டுக்கோட்டை செமினறியிலும் உயர் கல்வி கற்றார். தனது 20 ஆவது வயதில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் சித்திபெற்று ஆசிரியரானார். அதே ஆண்டு நீதிநெறி விளக்கம் என்னும் நூலினை உரையுடன் பதிப்பித்து வெளியிட்டார். பிறகு தமிழகம் சென்ற இவர் சென்னையில் பேர்சிவல் பாதிரியார் நடாத்திய தினவர்த்தமானி பத்திரிகையின் ஆசிரியர் ஆனார். இவரது தமிழ் ஆங்கிலப் புலமையை அறிந்த அரசு சென்னை இராசதானிக் கல்லூரியில் இவரைத் தமிழ்ப் பண்டிதராக நியமித்தது. 1857இல் சென்னைப் பல்கலைக்கழகம் முதன்முதலில் நடாத்திய கலைமாணிப் பரீட்சையில் முதல் மாணவராக சித்திபெற்றார். 1876 இல் ஏழாலையில் சைவப்பிரகாச வித்தியாசாலை ஒன்றை நிறுவினார். இவரின் பணிகளைக்

*த. அஜந்தகுமார்*

கௌரவித்து சென்னை அரசு இவருக்கு ராவ்பகதூர் என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

பதிப்புப் பணியில் சி. வை. தாமோதரம்பிள்ளையின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.

தமிழ் உரைநடை என்னும் கட்டிடத்துக்கு நல்லை நாவலர் அத்திவாரம் இட்டார். சி. வை. தா கூரை வேய்ந்தார் என்று சிறப்பிக்கப்படும் அளவுக்கு 'உறுதியான' பணியை இவர் ஆற்றி உ. வே. சாமிநாத ஐயருக்கு வழிகாட்டியாகவும் அமைந்தார்.

ஏடுகளைத் தேடி எடுப்பதில் உள்ள கஷ்டத்தையும் அதைப் பெயர்த்தெழுதுவதில் உள்ள கஷ்டத்தையும் சி. வை. தா,

ஏடு எடுக்கும் போது ஓரஞ் சொரிகிறது
கட்டு அவிழ்க்கும்போது இதழ் முறிகிறது
ஒற்றை புரட்டும்போது துண்டு
துண்டாய் முறிகிறது....

என்று குறிப்பிட்டிருக்கிறார். தேடியும் பிழையறப் பரிசோதித்தும், பதிப்பித்த இவர் நூல்களில் நீதி நெறி விளக்கம், வீரசோழியம், இறையனார் களவியலுரை, தொல்காப்பியம் பொருளதிகாரம் (நச்சி உரை) தொல். எழுத்ததிகாரம் (நச்சி உரை) இலக்கண விளக்கம், சூளாமணி, கலித்தொகை, தணிகைப் புராணம் போன்றன விளங்குகின்றன.

இவர் எழுதிய நூல்களில் நட்சத்திரமாலை, ஆதியாகம கீர்த்தனம், ஆறாம் ஏழாம் வாசல் புத்தகங்கள், கட்டளைக் கலித்துறை, சைவ மகத்துவம், சூளாமணி வசனம் போன்றன முக்கியமானவை. நாவலர் இறந்தபோது இவர் பாடிய 'நல்லை நகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்....' என்பது மிகப் பிரபலமான பாடலாகும். தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலகட்டங்களை முதன்முதலாக இவரே பகுக்க முனைந்தார். வாய்மொழிக் காலம், அட்சரகாலம் என எட்டுக் காலங்களாக வீரசோழிய முன்னுரையிலே கூறியுள்ளார்.

இவ்வாறாக தமிழ்ப்பணிகளில் தன்னைக் கரைத்த ராவ்பக்தூர் சி. வை. தாவின் பணிகள் என்றும் அழியாத இயல்புடையன ஆகும்.

*த. அஜந்தகுமார்*

# பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

யாழ்ப்பாண மாவட்டத்திலே மட்டுவில் கிராமத்திலே 1899 ஆம் ஆண்டு பிறந்த சி. கணபதிப்பிள்ளை அவர்கள் குமாரசாமிப் புலவரிடமும் த. கைலாசபிள்ளையிடமும் கல்வி பயின்றவர். 1926ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச்சங்கம் நடாத்திய பண்டித பரீட்சையில் சித்தியடைந்து தமிழ்ப் பண்டிதரானவர். 1929ஆம் ஆண்டு திருநெல்வேலி சைவாசிரியப் பயிற்சிக் கலாசாலையிலே விரிவுரையாளராக இணைந்து முப்பது ஆண்டுகள் பணிசெய்து 'பேர் சொல்லும்' மாணவர் பரம்பரையை உருவாக்கினார். இதுவே அவரை பண்டிதமணி என்ற நிலைக்கு உயர்த்தியது. பண்டிதமணி அவர்கள் தமது புலமையை மேடைப்பேச்சு, வானொலி உரை, நூல் வெளியீடு, உரையாக்கம் ஆகிய பல்வேறு துறைகளினூடாக வாரிவழங்கினார். இவரது ஆக்கங்களில் எல்லாம் சமயமும் தத்துவமும், சமூகமும் பண்பாடும், இலக்கிய ரசனையும் ஊடறுத்து நின்றன.

இவரது நூல்களாக கண்ணகி தோத்திரம், கதிர்காம வேலவன் பவனி வருகிறான், இலக்கிய வழி, கந்தபுராண கலாசாரம், கந்தபுராண போதனை, சைவ நற்சிந்தனைகள், பாரத நவமணிகள், சிவராத்திரியிற் சிந்திக்கத்தக்கவைகள், அன்பின் ஐந்திணை, அத்வைத சிந்தனை, சிந்தனைச் செல்வம், சிந்தனைக் களஞ்சியம், செந்தமிழ்க் களஞ்சியம், கம்பராமாயணக் காட்சிகள், ஆறுமுகநாவலர், நாவலரும் கோயிலும் போன்றன விளங்குகின்றன.

சைவத்தமிழ்ப் புலமையாளராக விளங்கிய பண்டிதமணி அவர்களுக்கு இலங்கைப் பல்கலைக்கழகம் 1978 ஆம் ஆண்டு இலக்கியக் கலாநிதி என்ற கௌரவ பட்டத்தை வழங்கி பெருமைபெற்றது.

ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராக இருந்ததோடு காவிய பாடசாலை ஒன்றை நடாத்தி பண்டித பரம்பரை உருவாக்கம் பெறவும் பாடுபட்டு உழைத்தார். இவரது உரைநடை தனித்துவமான உரைநடையாக இருந்தது. பழந்தமிழ்ப் புலமையில் ஊறிய மரபுவழி தமிழாசிரியராக இருந்தும் நவீன இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவர். தனது ஆக்கங்களில் நவீன உத்திகளைக் கையாண்டவர். சிறுகதை போன்ற நவீன இலக்கிய முயற்சிகளிலும் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

*த. அஜந்தகுமார்*

மரபுவழிப் புலமையாளரான பண்டிதமணி தனது சமய, தமிழ் இலக்கிய புலமையினாலும் அவரது உரைநடையினாலும் சீரிய சிந்தனைகளினாலும் முக்கியம் பெறுகின்றார். 1986 இல் இவர் மறைந்தாலும் இவரது பணிகள் காலத்தால் அழியாது அவர் புகழ் பேசுகின்றன.

## பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை

நவீன ஈழத்து இலக்கியத்தைப் பற்றி எழுதுவோர் பலர் பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளையைக் குறிப்பிடாமல் எழுதமுடியாது. ஈழத்து இலக்கிய முன்னோடி, இருபதாம் நூற்றாண்டு ஈழத்து இலக்கிய முதல்வர், நவீனத்துவத்தின் விடிவெள்ளி என்றெல்லாம் இவர் பாராட்டப்படுவதாக பேராசிரியர் க. கைலாசபதி குறிப்பிடுகிறார். ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்திலும் தென்னிலங்கையிலும் ஆசிரியராகவும், லிகிதராகவும் கடமையாற்றிய இவர் இந்தியா சென்று 1898 அளவில் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பினார். 1900 இல் தெல்லிப்பளை அமெரிக்கன் மிஷன் பாடசாலைத் தலைமையாசிரியர் ஆனார். அடுத்த பத்தாண்டுகள் கலை இலக்கிய சமூக விவகாரங்களில் பேரூக்கத்துடன் உழைத்தார். 1901 இல் கீதோபதேச கீதரச மஞ்சரி என்ற நூலை எழுதினார். அதே ஆண்டு ‘உதயதாரகை’ பத்திரிகையின் ஆசிரியரானார். 1910 ஆம் ஆண்டு அமெரிக்கன் மிஷன் பாடசாலை தொடர்பை முறித்துக் கொண்டு தனது வீட்டிலேயே மகாஜனா உயர்நிலைப் பள்ளியை ஆரம்பித்து இறக்கும்வரை அதன் உயர்ச்சிக்காய்ப் பாடுபட்டார். 1927இல் ‘சிவமணிமாலை’ என்னும் செய்யுள் நூலை வெளியிட்டார். இதைத்தவிர எங்கள் தேசநிலை, சுவதேசக்கும்பி போன்ற நூல் களையும் வெளியிட்டார். ஆறுமுகநாவலரின் பன்முகப்பட்ட முயற்சிகளின் தருக்கரீதியான வளர்ச்சியின் வடிவமாக இவரைக் கருதலாம். அதாவது தேசியத்தின் ஆரம்பகால வளர்ச்சிக்கூறுகளை இவரில் தூலமாகக் கண்டுகொள்ளலாம். பலவழிகளிலும் நாவலரின் இலட்சியங்களைப் பின்பற்றியவர் எனத்தகும் பாவலரவர்கள் பல்லாண்டுகளாகவே மதுவிலக்குப் பிரசாரத்தில் ஈடுபட்டார். இவர் உதயதாரகையில் எழுதிய ஆக்கங்களும் யாழ்ப்பாண சுவதேசக் கும்மியில் எழுதிய பாக்கள் சிலவும் இதற்கு சான்று.

தேசிய ரீதியான இவரது பாடல்கள் பாரதியாருடன் இவரை ஒப்புநோக்க வைக்கின்றன.

*த. அஜந்தகுமார்*

ஒவ்வொரு வீட்டினுக் கொவ்வொரு சாதியாய்
ஊரிற் பிரிவினை மெத்திடுங்கால்
செவ்வையுறு ஐக்கிய சந்தோசமெங்களை
சேருதல் எங்ஙனம் சங்கமின்னே

என்று சாதியை எதிர்த்ததோடு தேசியத்தில் பற்றும் கொண்டிருந்தார் என்பதை விளங்கிக்கொள்ளமுடியும்.

1905 இல் சகலகுண சம்பன்னன் என்ற நாடகத்தையும் இவர் எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது. தெல்லிப்பளை மஹாஜனக் கல்லூரியின் பொன்விழா சிறப்பு மலராக 'சிந்தனைச் சோலை' என்ற மகுடத்தின்கீழ் இவரரின் படைப்புகளில் பெரும்பாலானவை தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன.

பாரதியாருக்குப் பத்து வயது மூத்தவரான துரையப்பாபிள்ளை பலவழிகளில் பாரதி சென்ற இலக்கியப் பாதையில் சென்றவர். ஈழத்தில் இவரே சமூக சிந்தனையை முதலில் கவிப் பொருளாக்கியவர். எளிமையைக் கவிதைப் பண்பாக்கியவர். சீர்திருத்தத்தைச் சீரிய முறையில் எடுத்துச் சொன்னவர். தேசியத்தைக் கல்வி கவிதை ஆகியவற்றில் புகுத்தியவர். இந்தவகையில் என்றும் இவர் நினைவுகூரப்படுவார்.

## கூழங்கைத் தம்பிரான்

தமிழ்நாட்டில் இருந்து வந்து ஈழத்தில் தமிழ்ப்பணி செய்த அறிஞர்கள் வருகையில் கூழங்கைத் தம்பிரான் முக்கியமானவர். இவர் காஞ்சிபுரத்தில் பிறந்தவர். அங்கு வடமொழி, தென்மொழி அறிவு நிரம்பப்பெற்றவராய் யோக மார்க்க ஈடுபாடு மிகுந்தவராய் விளங்கினார். அதனால் கனகசபாபதி யோகி என அழைக்கப்பட்டார்.

தஞ்சையிலுள்ள திருவத்தூர் மடத்திலே தம்பிரானாக விளங்கிக் கொண்டிருந்த இவர் மடத்திலுள்ள பிறருடன் ஏற்பட்ட மனத்தாங்கல் காரணமாக மடத்தினைவிட்டு நீங்கினார். ஈழத்துக்கு வந்து யாழ்ப்பாணத்திலே வண்ணார்பண்ணையில் வாழ்ந்து கொண்டிருந்த வைத்திலிங்கச் செட்டியார் என்பாருடைய ஆதரவிலே தங்கியிருந்தார். முதலிலே செட்டியாருக்கும் அவருடைய மக்களுக்கும் கல்வி கற்பித்துக்

கொண்டிருந்த இவருடைய புகழானது விரைவிலே இலங்கை முழுவதும் பரவலாயிற்று. கொழும்பு முதலான பெரு நகரங்களிலுள்ள பாதிரியாரும் பிறரும் இவரை அழைத்துக் கல்வி பயின்றார்கள். பிலிப்பு த மெல்லோ என்னும் பாதிரியார் இவருடைய சிறந்த நண்பராக விளங்கினார்.

'தேவப்பிரசையின் திருக்கதை' 'யோசேப்புப் புராணம்' ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். நன்னூலுக்கு இவரால் ஒரு விருத்தியுரை எழுதப்பட்டதென்பர். நல்லைக் கலி வெண்பா கூழங்கையர் வண்ணம் என்னும் நூல்களும் இவரால் இயற்றப்பட்டவை எனக் கூறுவர்.

காய்தல் உவத்தல் அற்றவராய் இவர் இருந்தமையினால் யோசேப்பு புராணம் என்ற கிறிஸ்தவ இலக்கியத்தையும் பாடினார். இது 21 காண்டங்களை உள்ளடக்கியது. 1028 பாடல்களைக் கொண்டது.

யாழ்ப்பாணத்தின் சைவத்தமிழ்ப் பாரம்பரியத்தின் மறுமலர்ச்சிக் காலத்து முன்னோடிகளில் ஒருவராய் ஒளிவீசிய பின் 1795 ஆண்டளவில் சமாதியானார்.

## நா. கதிரைவேற்பிள்ளை (1844 - 1907)

யாழ்ப்பாணம் பருத்தித்துறையைச் சேர்ந்த புலோலியூரிலே நாகப்பப்பிள்ளைக்குப் புதல்வராய் இவர் தோன்றினார். இளமைக்காலம் தொடங்கி மிகுந்த புத்திக்கூர்மையும் மிகுந்தவராய் விளங்கினார். இந்தியா சென்று சென்னையில் தங்கியிருந்து தி. த. கனகசுந்தரம்பிள்ளையிடத்தில் தொல்காப்பியம், இலக்கண விளக்கம் முதலான நூல்களையும் பிற இலக்கியங்களையும் கற்றுக்கொண்டார். வடமொழிப் புலமையும் பெற்றவர்.

அங்கு தங்கியிருந்து சைவசமய விரிவுரைகள் செய்துள்ளார். மாயாவாதத்தினைத் திறம்பெற மறுத்தொதுக்கிப் பேசும் வன்மை வாய்ந்தவராய் விளங்கிய காரணத்தினால் சென்னையில் வாழ்ந்த புலவர்கள் இவருக்கு "மாயாவாத தும்சகோளரி" என்னும் பட்டம் வழங்கினார்கள்.

இவர் ஆரணி சமஸ்தானத்தில் வித்துவானாக இருந்த காலத்தில் சமஸ்தானத் தலைவர் இவருக்கு 'அத்துவித சித்தாந்த மகோத்தாரணர்' என்னும் பட்டத்தை வழங்கினார்.

விரிவுரைகள் ஆற்றுவதில் மட்டுமன்றி அட்டாவதானம், சதாவதானம் செய்வதிலும் இவர் மிகுந்த வன்மை பெற்றிருந்தார்.

வி. உலகநாத முதலியார், வி. கல்யாண சுந்தர முதலியார் முதலான பலர் இவருடைய மாணாக்கர்களாக விளங்கினார்கள். வி. கல்யாணசுந்தர முதலியார் இவருடைய வாழ்க்கை வரலாற்றினை விரிவாக எழுதி (சென்னை 1908) வெளியிட்டுள்ளார்.

கூர்ம புராண விரிவுரை, பழனித்தல புராண விரிவுரை, சைவ சந்திரிகை, சைவசித்தாந்த சுருக்கம், சிவாலய மகோற்சவ விளக்கம், சுப்பிரமணிய பராக்கிரமம், கருவூர் மான்மியம், புத்தமத கண்டனம், மருட்டா மறுப்பு போன்ற நூல்களை இவர் எழுதியுள்ளார். இவரது தமிழ்ப் பேரகராதி (யாழ்ப்பாண அகராதி) காலத்தால் அழியாத அரும் பொக்கிஷமாகும். தமிழ் உள்ளவரை சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் பணிகளும் நிலைத்துநிற்கும்.

*த. அஜந்தகுமார்*

# நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்து ஈழத்து செய்யுளிலக்கிய வரலாற்றில் பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக அமைந்த புலவர்கள் வரிசையில் சோமசுந்தரப் புலவருக்கு முக்கிய இடமுண்டு.

யாழ்ப்பாணத்திலே உள்ள நவாலியென்னும் ஊரிலே 1878ம் ஆண்டு இவர் பிறந்தார். சிறுவயதிலேயே செய்யுளியற்றும் ஆர்வம் உடையவராக இருந்த புலவர் செய்யுள் இலக்கியங்ளையே அதிகம் எழுதியுள்ளார். அவை பெரும்பாலும் சமய சம்பந்தமானவையாகவே இருந்தன. சமயத்திற்கு அப்பால் சமூக தேசிய உணர்வுடன் புலவர் இலக்கியம் படைத்தமைக்கு இலங்கை வளம், மருதனஞ்சலோட்டம், தாலவிலாசம் முதலான நூல்களும், வேறு சில தனிப் பாடல்களும் சான்றாக உள்ளன. அத்தோடு குழந்தைகளுக்கு ஏற்ற தனிப்பாடல்கள், கதைப்பாடல்கள் என்பவற்றையும் புலவர் இயற்றியுள்ளார். புலவரின் ஆக்கங்களில் அதிகமானவை நூலுருப் பெற்றுள்ளன. இவருடைய ஆக்கங்கள் இந்துசாதனம், ஈழகேசரி, சுதேச நாட்டியம், செந்தமிழ்ச் செல்வி ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. 2006ம் ஆண்டு இவருடைய ஆக்கங்களில் பெரும்பாலானவற்றை உள்ளடக்கி செந்தமிழ் அமுதம் என்ற நூல் அவரின் மிக நெருங்கிய உறவினர்களால் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

செய்யுள் இலக்கியங்களை இயற்றித் தமிழ்ப்பணி புரிந்த புலவர், சமயத் தொண்டுகளும் செய்துள்ளார். சைவ சித்தாந்த புராண வகுப்புகளும் நடாத்தியுள்ளர். இவர் நடத்திய சைவபாலிய சம்போதினி என்ற பத்திரிகை சைவ சித்தாந்தத்தையும் சைவசாரத்தையும் விளக்குவதாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சமயத்தை பொருளாகக் கொண்ட மரபுவழிப்பட்ட பிரபந்த இலக்கியங்களை அதிகம் பாடியவரும் இவரே. பதிகம், ஊஞ்சல், கலம்பகம், நான்மணிமாலை, அட்டகம், அந்தாதி, திருப்பள்ளியெழுச்சி, சிலேடை, வெண்பா என்று பல பிரபந்தங்களைப் பாடியுள்ளார்கள். இதில் அட்டகிரிக் கலம்பகம் நல்லையந்தாதி, கதிரைச் சிலேடை வெண்பா ஆகியன சிறப்புக்குரியன.

*த. அஜந்தகுமார்*

அத்தோடு குழந்தைப் பாடல்கள் ஆக்கும் முயற்சியில் ஈடுபட்ட ஈழத்துப் புலவர்களுள் சோமசுந்தரப் புலவரே ஈழத்துக் குழந்தைகளின் அனுபவத்திற்கேற்ற சிறந்த பாடல்களைப் பாடியுள்ளார். புலவர் குழந்தைகளுக்காகப் பாடிய பாடல்கள் சிறுவர் செந்தமிழ் என்ற நூலில் இடம்பெற்றுள்ளன. தனிப்பாடல்களாகவும், கதைப் பாடல்களாகவும் புலவர் பாடிய குழந்தைப் பாடல்களுள் ஆடிப்பிறப்பு, கத்தரி வெருளி, புழுக்கொடியல், எலியுஞ் சேவலும், பவளக் கொடி முதலான பாடல்கள் சிறந்தவையாகும்.

ஆடிப் பிறப்பிற்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப்பனங்கட்டி கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே.

கத்தரித்தோட்டத்து மத்தியிலே நின்று
காவல் புரிகின்ற சேவகா-நன்று
காவல் புரிகின்ற சேவகா
மெத்தக் கவனமாய் கூலியும் வாங்காமல்
வேலை புரிபவன் வேறுயார் உன்னைப்போல்
வேலை புரிபவன் வேறுயார்.

## வித்துவ சிரோன்மணி சி. கணேசையர்

01.04.1879ம் ஆண்டு புன்னாலைக் கட்டுவனில் சி.கணேசையர் அவர்கள் பிறந்தார். வித்துவசிரோன்மணி ந.ச. பொன்னம்பலபிள்ளையிடமும் அவர் மறைவுக்குப் பின் சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவரிடமும் இவர் கல்வி கற்றார். காசிவாசி செந்திநாத ஐயரிடமும் சில சந்தேகங்களை கேட்டுத் தெளிந்து கொண்டார்.

இவருடைய தமிழ்த்தொண்டு பரந்துபட்டது. மாணவர்களுக்குக் கற்பித்தல், ஆராய்ச்சிக் கட்டுரைகள் வரைதல் சிறுவர்களுக்கான எளியநடை நூல்களை எழுதுதல், இலக்கிய - வாழ்க்கை வரலாற்று நூல்களை யாத்தல், பழைய இலக்கியங்களுக்கு உரை வகுத்தல், இலக்கண நூல்களை உரை விளக்கக் குறிப்புகளோடு பதிப்பித்தல், செய்யுள் இலக்கியம் படைத்தல் என்று பல பணிகளில் இவர்

ஈடுபட்டார். இவரின் கட்டுரைகளில் கவியின்பம், ஒரு செய்யுட் பொருளாராய்ச்சி, நச்சினார்க்கினியார் உரை நயம், இராமாயணச் செய்யுட் பாடாந்தரம், அளபெடை, போலி எழுத்து பிறிதுபிறிதேற்றல் ஆறனுருபு பிறிதேற்றல், சிறுபொழுதாராய்ச்சி போன்றன முக்கியமானவை.

சிறுவர்களுக்காக இவர் எழுதிய குசேலர் சரிதம் மிக முக்கியமானது. தமது ஆசிரியரான குமாரசுவாமிப் புலவர் சரித்திரத்தையும், ஈழ நாட்டுப் புலவர் சரிதத்தையும் இவர் எழுதினார்.

அகநானூறு, களிற்றியானைநிரைப் பாடல்களுக்கு இவர் எழுதிய புத்துரை முக்கியமானது. இது பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவால் பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளது. நாணிக் கண் புதைத்தல் என்ற துறைக் கோவைக்கும் இவர் புத்துரை எழுதியுள்ளார். இவரின் நிறைந்த தமிழறிவின் வெளிப்பாடாக அமைவது தொல்காப்பிய உரைவிளக்கக் குறிப்புகளாகும். இந்தவகையில் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரை, தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம் (இரண்டாம் பாகம்) பின்னான்கியல்களும் பேராசிரியரும் தொல்காப்பியம் பொருளதிகாரம் (முதலாம் பாகம்), முன்னைந்தியல்களும் நச்சினார்க்கினியமும் ஆகியவற்றை ஐயரவர்கள் உரைவிளக்கக் குறிப்புகளோடு பதிப்பித்தார்கள். பின்னாளில் பல அறிஞர்கள் தொல்காப்பிய உரை விளக்கக் குறிப்பு வெளியிட இவரே வழிகாட்டியாய் அமைந்தார். இதனாலேயே உ.வே.சாமிநாத ஐய்யர் "உங்கள் பதிப்புகள் மிக்க திருப்தியை உண்டு பண்ணுகின்றன" என்று இவரைப் பாராட்டியிருந்தார்.

தான் வழிபடு கடவுளாகிய வறுத்தலைவிளன் மருதடி விநாயகர் மீது பிரபந்தங்கள் பாடியுள்ளார். இவரது மணிவிழா வயது நிறைவின் போது அறிஞர்கள் பொற்கிளி வழங்கி (1938) கௌரவித்தமையும், 1951 இல் தமிழகத்தில் இவர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டமையும், 1952ல் ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கம் இவருக்கு 'வித்துவ சிரோன்மணி' பட்டம் வழங்கி கௌரவித்தமையும் குறிப்பிடத்தக்கவையாகும்.

# புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளைக்குத் தனித்துவமான ஓர் இடம் இருக்கிறது. மட்டக்களப்பு மண்டூரில் 1899ம் ஆண்டு இவர் பிறந்தார். மட்டுநகர் தந்த தமிழறிஞர்களுள் சுவாமி விபுலானந்தருக்குப் பின் விதந்து போற்றப்பட வேண்டியவர் இவராவார். பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையும் இவரும் ஒரு சாலை மாணாக்கர்கள் ஆவர். இவர் தமிழை மரபுரீதியில் வரன்முறையாகக் கற்றவர். யாழ்ப்பாண புலோலியூர் சந்திரசேகர உபாத்தியாரிடம் தொடங்கிய இவரது தமிழ்க் கல்வி சுன்னாகம் குமாரசாமிப் புலவரிடம் கொண்டுவந்து சேர்த்தது.

விபுலானந்தருக்கு யாழ்நூல் பெருமையைத் தேடித்தந்ததைப் போல் இவருக்கு பகவத்கீதை வெண்பா பெருமை தேடித்தந்தது. புலவர்மணியினுடைய கவிதை நூல்கள் பல வெளிவந்துள்ளன. அவர் இயற்றிய தனிப்பாடல்கள் பல மிகப் பிரசித்தம் வாய்ந்தவை. இவரின் தேசிய நிலைப்பாட்டிற்கு ஆதாரமாய் அமைந்த இலங்கை மணித்திரு நாடெங்கள் நாடே.... என்ற பாடல் பிரசித்தமானது.

இவரின் நூல்களில் பகவத்கீதை, வெண்பா, சீவகசிந்தாமணி (பாலசரிதை நாடகம்) விபுலானந்தர் மீட்சிப் பத்து, மண்டூர்ப் பதிகம், கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரன் பதிகம், சிற்றாண்டிப் பதிகம், மாமாங்கப் பதிகம், சர்வசமய சமரசப் பதிகம், இலங்கைப் புகையிரதப் பெருவிபத்து உள்ளதும் நல்லதும் (கட்டுரை தொகுப்பு) போன்றன முக்கியமானவை. புலவர்மணி கவிதைகள் என்ற தொகுப்பு ஒன்றும் வந்துள்ளது.

புலவர் மணி குறித்து எஸ்.டி.சிவநாயகம் "அவர் ஒரு சிறந்த மேடைப் பேச்சாளர், சிறந்த கவிஞர், சிறந்த வசனகர்த்தா, சிறந்த மொழிபெயர்ப்பாளர், சிறந்த நல்லாசிரியர், சிறந்த அரசியல் ஆய்வாளர், சிறந்த சிந்தனையாளர், சிறந்த இலக்கிய ஆய்வாளர், சிறந்த பண்பாளர், சிறந்த பத்திரிகையாளர்...." என்று கூறிக்கொண்டே செல்வது இவரின் சிறப்புக்கு அணியாகும்.

*த. அஜந்தகுமார்*

# முகம்மது காசிம் சித்திலெப்பை

எம்.சி.சித்திலெப்பை 1838 இல் கண்டியில் பிறந்தவர். இவரது தந்தையாரான எம்.எஸ்.சித்திலெவ்வை இலங்கையின் முதலாவது முஸ்லிம் சட்டத்தரணியாவார். பத்தொன்பதாம் நூற்றாண்டிலே இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் எல்லா வகையிலும் விழிப்புணர்வை ஏற்படுத்திச் செயலாற்றியவராக இவர் விளங்குகின்றார். தந்தையைப் போலவே சட்டத்தரணியாக இவர் தொழிலாற்றினாலும் இஸ்லாத்தையும் தமிழையும் வளர்ப்பதையே தம் முழு ஈடுபாடாகக் கொண்டிருந்தார்.

தமிழுக்கு இவர் ஆற்றிய பணிகளில் பத்திரிகை ஆசிரியராகவும், நாவலாசிரியராகவும், நூலாசிரியராகவும் அவர் ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்கவையாக விளங்குகின்றன. இவர் முஸ்லிம் நேசன், ஞானதீபம் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராக விளங்கி சாதாரண மக்களை நோக்கிப் பல்வேறு விடயங்கள் செல்வதற்கு வழிசெய்தார். இதனால் எல்லோருக்கும் விளக்கக்கூடிய எளிய நடையையே தனது பத்திரிகைகளில் பயன்படுத்தினார்.

தனது பத்திரிகைகளில் பல்வேறு சர்ச்சைகள் - விவாதங்களுக்கு இடம் அளித்து தேடலுக்கு வழிகோலினார். இந்த வகையில் முஸ்லிம் நேசனில் இடம்பெற்ற இலக்கிய சர்ச்சைகள் கவனிப்புக்கு உரியன.

அடுத்து அவரது நாவலாசிரியப் பணி குறிப்பிடத்தக்கது. 1885 இல் வெளிவந்த இவரது அசன் பேயின் சரித்திரம் என்ற நாவல்தான் இலங்கையில் வெளிவந்த முதல் நாவல் என்பதும் தமிழில் வெளி வந்த இரண்டாவது நாவல் என்பதும் குறிப்பிடத்தக்கது. 1884 இல் முஸ்லிம் நேசனின் தொடராக வெளிவந்து 1885 இல் இது நூலுருப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இதனால் இலங்கையின் தமிழ் நாவல் இலக்கிய முன்னோடி என்ற பெருமை சித்திலெப்பைக்கு எப்போதும் உண்டு. நூலாசிரியர் என்ற வகையில் சித்திலெப்பை ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்கன. இந்த வகையில் அரபு மொழியில் இருந்து அபுநவாசின் கதையை மொழிபெயர்த்தும், வீரமாமுனிவரின் பரமார்த்த குருகதையை மறுபிரசுரம் செய்தும் ஒரே நூலாக

'அபுநுவாசின் கதையும் பரமார்த்தகுருவின் கதையும்' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளார்கள்.

நாவலரைப் பின்பற்றி இவர் முஸ்லிம் மாணவர்களுக்கென பாடநூல்களை எழுதினார். அரபு மொழியில் பயிற்சி பெறுவதற்குரிய பாடநூல்களையும் அவர் எழுதி வெளியிட்டுள்ளார். தமது சமயம் சார்ந்த நூல்களிலும் பாடநூல்களிலும் அரபுச் சொற்களும் விரவி வரும் நடையினைக் கையாண்டுள்ளார்.

19ம் நூற்றாண்டில் முஸ்லிம் மக்கள் மத்தியில் சிறந்த அறிஞராக கோலோச்சிய முகம்மது காசிம் சித்திலெப்பை இலங்கையில் தமிழ் நாவல் இலக்கிய முன்னோடி என்ற வகையில் இலக்கிய உலகில் என்றும் நின்று நிலைத்திருப்பார்.

## கவிஞர் அப்துல்காதர்லெவ்வை

கிழக்கிலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர்களுள் அப்துல்காதர்லெவ்வை குறிப்பிடத்தக்கவர். ஆசிரியராகப் பணியாற்றிய இவர் மரபுவழிக் கவிதைக்கும் நவீன கவிதைக்கும் பாலமாக இருந்துள்ளனர்.

கிழக்கிலங்கை முஸ்லீம் முக்களின் வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டும் கவிஞர்களுள் இவர் குறிப்பிடத்தக்கவர். இவரின் செய்னம்பு நாச்சியார் மான்மியம், பாத்திமா சரிதை என்பன இதற்குத் தக்க சான்றாகும். செய்னம்பு நாச்சியார் மான்பியம் இலங்கையில் தோன்றிய குறிப்பிடத்தக்க அங்கதச்சுவை கொண்ட நூலாக விளங்குகின்றது. இது கிழக்கு இலங்கை முஸ்லிம்களின் வாழ்க்கை முறை, பண்பாடு என்பவற்றைப் பிரதிபலித்துக் காட்டுவதோடு, திருமண நடைமுறைகளை கிண்டலும் கேலியுமாக அழகாக சித்திரிக்கின்றது.

யாத்தஸ் கதிர் சதகம், நூறபையாத், இறசூல் சதம், நான் என்பன இஸ்லாமிய தத்துவ நோக்கில் அமைந்த கவிதைகளாகும். 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மொழிபெயர்ப்புத் துறையில் தமது ஆளுமையை வெளிப்படுத்திய கவிஞர்களுள் இவரும் ஒருவராவார்.

இஸ்லாமிய சமூகம் மற்றும் சமயம் சார்பாகவும் கட்டுரைகள் பலவற்றை இவர் எழுதியுள்ளார்.

*த. அஜந்தகுமார்*

# ஏ.ஜே. கனகரத்தினா

ஏ.ஜே. என அன்புடனும், மதிப்பிடனும் எல்லோராலும் அழைக்கப்பட்டவர் ஏ.ஜே கனகரத்தினா. 1953 - 1957 காலப்பகுதியில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியத்தில் சிறப்புப் பட்டம் பெற்ற இவர் 18 ஆண்டுகள் யாழ் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் போதனாசிரியராக விளங்கினான்.

சமகாலத் தமிழிலக்கியம் மீது ஆழ்ந்த அக்கறை கொண்ட இவர் தமிழில் மிக முக்கியமான விமர்சகராகவும், மொழி பெயர்ப்பாளராகவும் விளங்கினார். தன்னைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாதவராகவும் புகழை விரும்பாத ஒருவராகவும் இவர் வாழ்ந்தார். இடதுசாரிக் கருத்துக்களும் முற்போக்குச் சிந்தனையும் கொண்ட ஒருவராக இவர் வாழ்ந்தார். கல்லூரி நாள்களிலிருந்து இறக்கும் காலம் வரை தீவிர வாசகராகவே இவர் இருந்தார். இலக்கியம், நாடகம், திரைப்படம், ஓவியம், சிற்பம், அரசியல், பொருளியல், சூழலியல், வரலாறு, இதழியல் என்று அவரின் வாசிப்பு பரந்து விரிந்தது.

தான் ஆங்கிலத்தில் வாசித்து உள்வாங்கிய முக்கிய விடயங்கள் பலவற்றை மொழிபெயர்த்துள்ளார். அறிமுகப்படுத்தும் கட்டுரைகளையும், தழுவற் கட்டுரைகளையும், தன் மதிப்பீட்டுக் கருத்துக்களுடன் எழுதியுள்ளார். றேமண்ட் வில்லியம், அலெக்சாண்டர் புளொக், றெஜிசிறிவர்த்தன, அகிரா குரொஸாவா என்று முக்கியமான பலரை இவர் தமிழுக்கு மிக எளிமையாக அறிமுகம் செய்தார். ஏ.ஜேயின் இந்தப் பணியை அறிவுப் பரம்பல் இலக்கியம் என்ற பிரிவில் முக்கியமானதாக கலாநிதி.சுரேஷ் கனகராஜா மதிப்பிடுகிறார். தேசிய இலக்கியம், சமூகசார்பை வலியுறுத்தும் முற்போக்கு இலக்கியம் என்பவற்றில் ஏ.ஜே ஈடுபட்டுள்ளவர். இவற்றுக்குச் சார்பாகத் தனது கருத்துக்களை முன்வைத்துச் செயற்பட்டவர். தனது கருத்துகளிற்கு வலுச்சேர்க்கக் கூடிய மொழிபெயர்ப்புகளையும் செய்துள்ளார். இந்தவகையில் மார்சியமும் இலக்கியமும், "உருவம், உள்ளடக்கம், மார்க்சிய விமர்சனம்", "அதிகாரி, ஆட்சி, சோசலிசம், இலக்கியம் முதலியன கட்டுரைகள்" முக்கியமானவை.

இவரின் ஏராளமான படைப்புகள் இன்னும் நூலுருப் பெறாத போதும் மொழிபெயர்ப்புகளையும் கட்டுரைகளையும் தாங்கி மத்து, மார்க்சியவாதிகளும் தேசிய இனப்பிரச்சினையும், அவசரகாலம் 79 (பகுதி 1), மார்க்சியமும் இலக்கியமும் சில நோக்குகள், எல்லாளன் சாதியும் வரலாற்று மோசடியும், செங்காவலர் தலைவர் யேசுநாதர் போன்ற நூல்கள் வெளிவந்துள்ளன.

ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளை கவிதைகளை ஆங்கிலத்திற்கு பெயர்த்த இவர் பணி குறிப்பிடத்தக்கது. 1960 களில் சண்டே ஓவ்சேவர், கிலஸ்ரேட்டட் வீக்லி ஓ.்.வ் இண்டியா ஆகிய வெளியீடுகளிலும் பின்னர் ஜேணல் ஓவ் சவுத் ஏசியன் லீற்றேச்சர், சற்றடே நிவியம், தேட் ஐ ஆகியவற்றிலும், புதுடெல்லியில் இருந்து வரும் லிற்றில் மகசின் இதழிலும் என்று தமிழில் இருந்து ஆங்கில மொழிபெயர்ப்புகள் இடம்பெற்று பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. இதழியற்துறையிலும் இவர்பணி குறிப்பிடத்தக்கது. 60களின் ஆரம்பத்தில் சண்டே ஓவ்சேவரிலும் 1966 தொடங்கி 1976 வரை கோப்பறேற்றர் பத்திரிகையில் பதவிநிலை சார்ந்து பணியாற்றினார். யாழில் இருந்துவந்த சற்றடே றிவியூவில் பதவிநிலை சாராது இயங்கியிருக்கிறார். திசை, அலை, மல்லிகை ஆகிய இதழ்களோடு மிகவும் நெருக்கமான உள்ளார்ந்த தொடர்பைக் கொண்டிருந்தார்.

உலக நாடக அறிவும், தீவிர சினிமா சார்ந்த பிரக்ஞையும் உள்ள இவர் யாழ் திரைப்பட வட்டம் - இலங்கை அவைக்காற்றுக் கழகம் ஆகிய இரண்டினதும் தலைவராகவும் பணி செய்திருக்கிறார்.

றெஜிசிறிவர்த்தனாவின் ஆங்கில எழுத்துக்களை இரு பெரும் தொகுதிகளாக தொகுத்து வெளியிட்டுள்ளார்.

இவரது இலக்கியப் பணியை கௌரவித்து 2002 இல் காலம் இதழ் ஒரு சிறப்பிதழை வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாண மண்ணில் ஆழவேரூன்றிய உலகக் குடி மகனென - றெஜி சிறிவர்த்தனாவும் மிக வேகமாக மறைந்து வரும் ஓர் உயிர்வாசியை சேர்ந்தவர் என எஸ்.வி.ராஜதுரையும் சொல்லுமளவுக்கு நல்ல அரிதான மனிதராகவும் சிறந்த இலக்கியவாதியாகவும் இவர் விளங்கி மறைந்திருக்கிறார் எனின் மிகையல்ல.

*த. அஜந்தகுமார்*

# மாதகல் மயில்வாகனப் புலவர்

யாழ்ப்பாணத்தில் உள்ள மாதகல் என்ற இடத்தில் பிறந்த இவர் தனது மாமனாரான மாதகல் சிற்றம்பலப் புலவரிடமும் கூழங்கைத் தம்பிரானிடமும் கல்வி கற்றவர். 18ம் நூற்றாண்டின் இலக்கியப் போக்கில் இவர் முக்கியமானவர். மயில்வாகனப் புலவர் புலியூரந்தாதி, ஞானாலங்கார ரூப நாடகம், காசியாத்திரை விளக்கம், யாழ்ப்பாண வைபவமாலை ஆகிய நூல்களை எழுதியுள்ளார். இவற்றுள் யாழ்ப்பாண வைபவமாலை உரைநடை சார்ந்ததாகவும் ஏனையவை செய்யுள் சார்ந்தவையாகவும் உள்ளன.

தமிழ் நாட்டில் சிதம்பரத்தில் கோயில் கொண்டிருக்கும் சிவபிரான் மீது பாடப்பட்ட நூலாகப் புலியூர் அந்தாதி விளங்குகின்றது. இவரின் வித்துவத் திறமையை நூறு கட்டளைக் கலித்துறைகளால் அமைந்த இந்நூல் பகர்ந்து நிற்கிறது. மயில்வாகனப் புலவரின் நாடகத்துறை சார்ந்த விருப்பார்வத்தை ஞானாலங்கார ரூப நாடகம் உணர்த்துகின்றது. ஆத்மிக தத்துவ விடயங்களை உருவக உத்தியில் இது கூறுகிறது.

இவர் காசியத்திரை செய்துவிட்டுத் திரும்பிய பின்னர் இயற்றிய நூலாக காசியாத்திரை விளக்கம் அமைந்திருக்கவேண்டும். எனினும் இந்நூல் தற்போது அழிந்து போய்விட்டது.

யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூலே இவருக்கு பெருங்கவனத்தை தந்த நூலாகும். எளிய நடையில் கைலாயமாலை, வையாபாடல், பரராசசேகரன் உலா, இராசமுறை ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு இந்நூலை எழுதியுள்ளார். சிறந்த வரலாற்று ஆவணமாக இன்றுவரை இது கொள்ளப்படுகின்றது. தமது செய்யுள் நூல்களை நிறைத்து கற்றோர்க்கு மாத்திரமே விளங்கும் வகையில் எழுதிய இவர் யாழ்ப்பாண வைபவமாலையை சகலரும் விளங்கத்தக்க வகையில் எழுதியதன் மூலம் எளிமையான நடையை எழுதுவதிலும் மரபுவழியான செய்யுளை படைக்கும் ஆற்றலிலும் இவர் சிறப்புற்று விளங்கியமையை நாம் உணர்ந்துகொள்ளலாம்.

த. அஜந்தகுமார்

## உடுப்பிட்டி சிவசம்புப் புலவர்

19ம் நூற்றாண்டின் புலமை மரபில் சிறந்த ஒருவராக உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர் விளங்குகின்றார். நல்லூர் சரவணமுத்துப் புலவரினதும் நல்லூர் சம்பந்த புலவரினதும் மாணவனாக இவர் இருந்திருக்கிறார். இதனால் இளம் வளதிலேயே தொல்காப்பியம், இராமாயணம், பாரதம் உட்பட பல்வேறு நூல்களிலும் பாண்டித்தியம் மிக்கவராக புலவர் இருந்திருக்கிறார். தனது கவித்துவ ஆளுமையால் இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் புகழ்பெற்ற ஒருவராக இவர் இருந்திருக்கிறார்.

கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய சிவசம்புப் புலவர் 60 இற்கு மேற்பட்ட பிரபந்தங்களை பாடி இலங்கையில் அதிகமான பிரபந்தங்களைப் பாடியவர் என்ற புகழைப் பெற்றுள்ளார். தமது வித்துவச் சிறப்பை இனங்காட்டும் வகையில் சொல்லணிகள் மிக்க செய்யுள்களையும் இவர் பாடியுள்ளார். ஆறுமுகநாவலரால் "புலவர்" என்னும் பட்டம் சிவசம்புப் புலவருக்கு வழங்கப்பட்டதாக அறியப்படுகிறது.

இவரின் இலக்கியங்களில் திருவேரக யமக அந்தாதி, செந்தில் யமக அந்தாதி, கந்தவன நாதர் பதிகம், வல்லிபுரநாதர் பதிகம், புலோலி நான்மணிமாலை, பருத்தித்துறைக் கலித்துறை, வல்வைக் கலித்துறை, எட்டுக்குடிப் பிரபந்தம், பாஸ்கார சேதுபதி கல்லாடக் கலித்துறை, பாஸ்கார சேதுபதி நான்மாலை, மயில்வாகன வம்ச வைபவம் என்பன குறிப்பிடத்தக்கன. இவை தலம் சார்ந்தும், பெரியார் வள்ளல்கள் சார்ந்தும் பாடப்பட்டிருந்தனை குறிப்பிடத்தக்கது. இவற்றில் சிலவற்றை உள்ளடக்கி 1939இல் சிவசம்புப் புலவர் பிரபந்தத் திரட்டு வெளிவந்தது.

பழந்தமிழ் நூல்கள் சிலவற்றுக்கு இவர் உரையும் எழுதியுள்ளார். இந்தவகையில் மறைசையந்தாதி, யாப்பருங்கலக்காரிகையுரை, கந்தபுராணம், வள்ளியம்மை திருமணப் படலம் உரை முதலானவை முக்கியமானவை.

இவர் தனக்கென்று மாணவர் பரம்பரையையும் உருவாக்கி வெற்றி கண்டார்.

*த. அஜந்தகுமார்*

19ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை ஒரு பெரும் தூணாக விளங்க அதேபோல் ஈழத்தில் சிவசம்புப் புலவர் ஒரு பெரும் தூணாக விளங்கினார் எனின் அது உண்மை; வெறும் புகழ்ச்சியல்ல.

## *சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர்

19ஆம் நூற்றாண்டின் கடைக் கூறிலும் 20ம் நூற்றாண்டின் முதற் கூறிலும் வாழ்ந்த மிக முக்கியமான ஆளுமையாக குமாரசுவாமிப் புலவர் விளங்குகின்றார். "இலக்கணக் கொட்டர்" சுன்னாகம் முருகேச பண்டிதரிடமும், அளவெட்டி கனகசபைப் புலவரிடமும், இணுவில் நடராச ஐயரிடமும் இவர் மரபுவழிக்கல்வியை பெற்றுக்கொண்டார். ஆறுமுக நாவலருடனும், சி.வை.தாமோதரத்துடனும் இவருக்கு மிக இறுக்கமான தொடர்பு இருந்திருக்கிறது. ஈழ, தமிழக பத்திரிகைகளில் இவரது பல ஆக்கங்கள் வெளிவந்திருக்கின்றன.

இலக்கணம், இலக்கியம், உரை, பதிப்பு, அகராதி, மொழிபெயர்ப்பு, புராண படனம், கண்டனங்கள் என்று விரிந்து பரந்து தளத்தில் குமாரசாமிப் புலவர் இயங்கி இருக்கின்றார். இவர் எழுதிய இலக்கண ஆய்வு நூல்களுள் இலக்கண சந்திரிகையும், வினைபகுபத விளக்கமும் முக்கியமானதாகும். இவை இவரது இலக்கண ஆராய்ச்சிக்கு சான்று பகர்வானவாகும்.

இவர் எழுதிய இலக்கணப் புத்துரைகளுள் யாப்பருங்கலப் பொழிப்புரை, வெண்பாப் பாட்டியல் பொழிப்புரை, தண்டியலங்காரப் புத்துரை, யாப்பருங்கலக்காரிகைப் புத்துரை போன்றன முக்கியமானவை.

இவரது இலக்கிய முயற்சிகளாக செய்யுள் இயற்றுதலும், இலக்கியங்களுக்கு உரை எழுதுதலும், உரைநடை ஆக்கங்களும் விளங்குகின்றன. இவரது செய்யுள் இலக்கியமாக மிலேச்சமத விகற்பக்கும்பி குறிப்பிடத்தக்கது ஆகும். அத்தோடு தி.கனகசுந்தரம்பிள்ளையுடன் இணைந்து இவர் எழுதிய இராமாயணம் பாலகாண்ட அரும்பத உரை முக்கியமானது.

கண்ணகி கதைதரு தமிழ்ப்புலவர் சரித்திரம், சிசுபாலசரிதம், இரகுவம்ச சரிதாமிர்தம் போன்ற உரைநடை நூல்கள் இவருக்குப் புகழைக் கொடுத்தன.

மொழிபெயர்ப்பு முயற்சியிலும் இவர் ஈடுபட்டு இருந்தார். இந்த வகையில் வடமொழி இலக்கியங்களைத் தமிழிலே பெயர்த்துள்ளார். இந்தவகையில் மேகதூதகாரிகை, சாணக்கிய நீதி வெண்பா முதலானவை முக்கியமானவை.

குமாரசாமிப் புலவரின் இன்னுமொரு சிறப்பான பணியாக அகராதி முயற்சிகள் விளங்குகின்றன. மரபுவழித் தமிழ்ப் புலமையாளனான இவர் நவீனத்துவம் அறிமுகம் செய்த அகராதி முயற்சியிலே ஈடுபட்டமை கவனத்திற்குரியது. நிகண்டுகளுக்கு உரையெழுதிய முதிர்ச்சியினாலும் இலக்கிய இலக்கண பயிற்சியினாலும் இவர் செய்த இலக்கியச் சொல்லகராதி முக்கியமானது. இவ்வாறாகப் பல்வேறு துறைகளிலும் ஆழவேருன்றித் தன் ஆளுமையை வெளிப்படுத்தியவராக சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர் விளங்குகின்றார்.

## மதுரைப் பண்டிதர் க.சச்சிதானந்தன்.

தமிழுலகம் செய்த தவப்பயனால் 1921 - ஐப்பசி மாதம் 19ம் திகதி மாவிட்டபுரத்திலே பண்டிதர் சச்சிதானந்தன் அவர்கள் பிறந்தார். இலக்கியம், இலக்கணம், வானியல், சோதிடம், கல்வித் தத்துவம், உளவியல், ஓவியம் போன்ற துறைகளில் நிபுணத்துவம் உடையவராக அவர் விளங்கியிருந்தார். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மூன்று மொழிகளிலும் புலமை மிக்கவராக அவர் இருந்தார். 1941ல் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடாத்திய பண்டித பரீட்சைக்குத் தோற்றி இலங்கை, இந்திய மாணவர்கள் மத்தியில் முதலாவதாகச் சித்தியடைந்தார். நடேஸ்வராக் கல்லூரி பரமேஸ்வராக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரிகளில் கல்வி கற்ற இவர் இலண்டன் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தையும், முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. இலங்கை அரசாங்கத்தால் கலாகீர்த்தி விருது வழங்கியும் இவர் கௌரவிக்கப்பட்டார்.

*த. அஜந்தகுமார்*

## ஆசிரியப் பணி

உடுவில் மகளிர் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகவும், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளராகவும் உப அதிபராகவும் பணியாற்றினார். 2006ஆம் ஆண்டின் முதற் கூறுகளில் யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் வருகை விரிவுரையாளராகவும் இருந்துள்ளார்.

## புனைக் கதைப் பங்களிப்பு

ஆனந்தன் என்ற பெயரில் ஈழகேசரியில் இவர் எழுதிய தண்ணீர்த் தாகம் என்ற கதையே ஈழத்தின் முதற் சாதியக் கதையென்று செங்கை ஆழியான் போன்றவர்களால் சிறப்பிக்கப்படுமளவுக்கு இவர் சிறுகதையிலும் ஆர்வஞ் செலுத்தி இருக்கிறார். இதைத் தவிர 5 கதைகள் ஈழகேசரியில் வெளிவந்துள்ளன. அன்னபூரணி என்ற நாவலையும் ஈழகேசரியில் எழுதியுள்ளார்.

## கவிதை இலக்கியப்பணி

காதலியின் கையெழுத்து என்ற இவருடைய முதற்கவிதை வி.க வின் நவசக்தி என்ற இந்திய சஞ்சிகையில் வெளியானது. ஆனந்தத்தேன் என்பதுதான் இவரது முதலாவது கவிதைத் தொகுதி. இந்தத் தொகுதியிலேயே இவரது பிரபல்யமான கவிதையான,

தேவர்க் கரசுநிலை வேண்டியதில்லை - அவர்
தின்னும் சுவையமுது வேண்டியதில்லை
சாவிற் தமிழ் படித்துச் சாகவேண்டும் - என்றன்
சாம்பல் தமிழ் மணந்து வேக வேண்டும்

என்பது இடம்பெற்றுள்ளது. இக்கவிதையை யார் எழுதியது என்றெல்லாம் பெரிய சர்சைகளும் இடம்பெற்றிருந்தன. அந்தளவுக்கு இவரின் கவித்துவம் சிறந்து இருந்தது.

இவரின் பெரும்பாலான கவிதைகளை உள்ளடக்கி ‘எடுத்த மலர்களும் தொடுத்த மாலையும்’ என்ற தொகுதி வெளியாகி இருந்தது.

## சிறுவர் இலக்கியப் பணி

பல சிறுவர் பாடல்களை இவர் பாடியுள்ளார். அரசாங்க பாடநூல் எழுத்தாளர் தலைவராக இருந்த காலத்தில் இவர் எழுதிய பாடல்களில்

சிங்கத்தின் தோட்டத்தில்
சிக்கி விட்டதெங்கள் பட்டம்

என்ற பாடல் முக்கியமானது. சிறுவர் பாடல்களை மஞ்சு மலர்க்கொத்து என்ற நூலாகத் தொகுத்து வெளியிட்டார். இதில் ஓவியங்களையும் ஓகன் இசைக்குறிப்புகளையும் இவர் தந்திருந்தமை இவரின் பல்புலமைக்குச் சான்று.

## காவிய இலக்கியப் பணி

தற்காலத்திலும் ஈழத்து இலக்கியத்தை காவியநங்கை கொண்டு அலங்கரித்த தகைசார் பெருமை சச்சிதானந்தன் அவர்களுக்கு உரியது. இந்தவகையில் யாழ்ப்பாண காவியம், இலங்கைக் காவியம் போன்றவை மிக முக்கியமானவை. யாழ்ப்பாணத் தமிழரசர்களின் வரலாற்றை எழுச்சி மிக்க கற்பனை வளத்துடன் 2045 கவிதைகள் கொண்ட காவியமாக யாழ்ப்பாணக் காவியத்தைப் பாடியுள்ளார். இதில் கி.பி (1450 - 1467) வரையான யாழ்ப்பாண சரித்திரத்தைத் தெளிவாகப் பிரதிபலித்துப் பாடியுள்ளார். இக்காப்பியம் சாகித்திய மண்டலப் பரிசு, வடக்கு கிழக்கு மாகாண இலக்கியப் பரிசு, சம்பந்தன் விருது ஆகியவற்றை பெற்றமையையும் குறிப்பிடத்தக்கது.

இனப்பிரச்சினை மற்றும் உள்நாட்டுப் போர் போன்றவற்றின் பின்னணியில் நீண்ட கதையொன்றை இலங்கைக் காவியமாகப் பாடியுள்ளார். 4468 கவிதைகளைக் கொண்ட இதனை முதலாவது பகுதி பருவ பாலியர் படும்பாடு என்ற தலைப்பிலே வெளிவந்துள்ளது. 1950 - 1992 வரையான காலப்பகுதியைத் தெளிவாக கவித்துவத்துடன் பிரதிபலிக்கிறது.

## இலக்கணப் பணி

தமிழ் இலக்கணத்தில் இவருக்கு இருந்த தலைமையை மஞ்சுகாசினியம் இயங்கு தமிழியல் என்ற நூலில் தெளிவாகக் காணலாம். Fundamentals Of Tamil Prosody (தமிழ் யாப்பிலக்கண அடிப்படைகள்) என்ற ஆங்கில நூலும் இவரின் இலக்கணப் புலமைக்கு உரைகல்.

**மேலும்,** விபுலானந்தர் யாழ்நூல் பற்றிய ஆராய்ச்சியிலே ஈடுபட்ட போது அவருக்குத் துணையாக இருந்த பெருமை இவரைச் சாரும்.

*த. அஜந்தகுமார்*

யாழ் நூலில் உள்ள யாழ் ஓவியத்தை வரைந்த பெருமையும் இவருக்கு உண்டு. தமிழர் யாழியல் என்ற நூலையும் எழுதியுள்ளார். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் வாக்கிய பஞ்சாங்க ஆசிரியர் குழுமத்தில் ஒருவராக இவர் செயற்பட்டிருக்கிறார். இவ்வாறு சிறந்த இலக்கிய இலக்கணப் புலமை மாத்திரம் அல்லாது பல்வேறு புலமைகளின் புகலிடமாய் இருந்த பண்டிதர் சச்சிதானந்தன் தமிழ் உள்ளளரை நிலைத்திருப்பார்.

## செ. யோகநாதன்

ஈழத்து தமிழ் எழுத்தாளர்களில் செ.யோகநாதன் மிக முக்கியமானவர். 1960 - 1964 காலப்பகுதியில் பேராதனைப் பல்கலைக் கழகம் வெளிக்கொணர்ந்த படைப்பாளிகளில் இவர் முக்கியமானவர். முற்போக்கு அணியின் மிகத் தீவிரமான படைப்பாளியாக இவர் 50 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கியிருக்கிறார். பல்கலைக்கழகத்தில் பயின்ற போது க.கைலாசபதி, கா.சிவத்தம்பி ஆகியோரின் கருத்து நிலைகளால் கவரப்பட்டு தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் ஈடுபட்டதோடு முற்போக்குவாதியாக தேசியம், மண்வாசனை, யதார்த்தம் ஆகிய கருத்துநிலைகளுக்கு உட்பட்டிருந்தார். பேராதனையில் கல்வி கற்கின்ற போது யோகநாதன் கதைகள் என்ற தொகுதியை வெளியிட்டார். அங்கு பல்கலை மாணவரின் தொகுதியாக வந்த கதைப்பூங்கா போன்ற தொகுதிகளில் இவரின் பங்களிப்புக் கணிசமானது.

பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றதும் ஆசிரியராகக் கடமையாற்றியவர். பின் உதவி ஆணையாளராகவும், உதவி அரசாங்க அதிபராகவும் பணியாற்றியவர். 1987ல் 14 ஆண்டுகள் தமிழகத்திலே வாழ்ந்தார். தமிழகத்தில் இருந்த காலத்தில் மிகுந்த கவனத்தைப் பெற்றிருந்தார். முப்பது கோடி முகங்கள், கண்ணாடி வீட்டினுள் ஒருவன் ஆகிய படங்களுக்குத் திரைக்கதை எழுதியுள்ளார். உலகின் அதிக மொழிகளில் இவரின் கதைகள் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

13 நாவல்களையும்

15 குறு நாவல்களையும்

17 சிறுகதைத் தொகுதிகளையும்

11 சிறுவர் இலக்கியங்களையும்

வெளியிட்டுள்ளார். தமிழகத்தில் இருந்த காலத்தில் வெள்ளிப் பாதசரம், ஒரு கூடைக் கொழுந்து போன்ற ஈழத்து எழுத்தாளர்களின் கதைகளை உள்ளடக்கிய 2 தொகுதிகளை மனைவியுடன் இணைந்து வெளியிட்டமை முக்கியமானது.

## இவரது படைப்புகளின் விபரங்கள்

### நாவல்கள்

ஜானகி, தனியாக ஒருத்தி, தஞ்சம் புகுந்தவர்கள், கிட்டி, வனமலர், நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே, நியாயப்படுத்தப்பட்ட கொலைகள், சிறுபொறி பெருந்தீ, துன்பக் கேணியில், மீண்டும் வந்த சோளகம், அசுரவித்து, மிஸ் கமலா, அரசு? ?

### குறுநாவல்கள்

கனவுகள் ஆயிரம், ஒளி நமக்கு வேண்டும், காவியத்தின் மறுபக்கம், இரவல் தாய்நாடு, தலைவர்கள், சுந்தரியின் முகங்கள், இனிவரும் வசந்தங்கள், காணிநிலம் வேண்டும். அகதியின் முகம், காற்றும் சுழி மாறும், இன்னும் இரண்டு நாட்கள், அசோகவனம், ஆகாயத் தாமரை, கேட்டிருப்பாய் காற்றே, மேலோர் வட்டம்.

### சிறுகதைத் தொகுதிகள்

கண்ணீர் விட்டே வளர்த்தோம், தேடுதல், அந்திப்பொழுதும் அஞ்சாறு கதைகளும், காற்றில் ஏறி விண்ணையும் சாடலாம், ஒரு சொல், அவளுக்கு நிலவென்று பேர், வீழ்வேன் என்று நினைத்தாயோ, மூன்றாவது பெண், கண்ணில் தெரிகின்ற வானம், அன்னை வீடு, மாசறு பொன்னே, விநோதினி, யோகநாதன் கதைகள், அண்மையில் ஒரு நட்சத்திரம், கனவு மெய்ப்படும், இன்னும் இரண்டு நாட்கள், இத்தனையும் ஒரு கனவாக இருந்தால்....

### சிறுவர் இலக்கியம்

சிறுவர் கதைக் களஞ்சியம், சூரியனைத் தேடியவன், சின்னஞ் சிறு கிளியே, காற்றின் குழந்தைகள், தங்கத் தாமரை, அதிசயக்

கதைகள், அற்புதக் கதைகள், எல்லோரும் நண்பர்கள், மந்திரமா தந்திரமா?, நான்கு கதைகள், வெண்புறா

**வாழ்கை வரலாறு**

சுவாமி விபுலானந்தர்

**சினிமா**

பெண்களும் சினிமாவும்

**தொகுப்பு நூல்கள்**

வெள்ளிப் பாதசரம், ஒருகூடைக் கொழுந்து, சுதாராஜின் கதைகள்.

## இளங்கீரன்

ஈழத்துத் தமிழ் நாவலாசிரியர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவராக இளங்கீரன் விளங்குகின்றார். 1927ல் யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர் தன் இளமைக் காலத்தை இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் கழித்தார். மலேசியாவில் தினமணி என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்தார். அங்கிருந்து தமிழ்நாட்டுக்கு வந்து அங்கு சில நாவல் முயற்சிகளில் ஈடுபட்டார். இலங்கை வந்த பிறகே அவர் நாவல் முயற்சிகள் வீரியம்பெறத் தொடங்கின. நாவல் மாத்திரமன்றி நாடகங்கள், கட்டுரைகள் போன்றவற்றையும் இவர் எழுதியுள்ளார். இதழியல் முயற்சிகளிலும் காலூன்றியிருந்தார்.

ஈழத்தைப் பொறுத்தவரையில் சாதாரண மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை சமூகப் பிரச்சினைகளை சமூகவியல் நோக்கில் அணுகும் தொடக்கப்புள்ளி இளங்கீரன் எழுதிய 'நீதியே நீ கேள்' என்ற நாவல் மூலமே தொடங்கப்பட்டது. இது தினகரனில் தொடராக வெளிவந்தபோது பெரும் பாராட்டினைப் பெற்றது. இளங்கீரனின் நாவல்கள் பலவும் பத்திரிகைத் தொடர்கதைகளாக வெளிவந்தவையே. தென்றலும் புயலும், சொர்க்கம் எங்கே, மண்ணில் விளைந்தவர்கள், இங்கிருந்து எங்கே, அவளுக்கு ஒரு வேலை வேண்டும் முதலியன குறிப்பிடத்தக்க படைப்புக்கள்.

*த. அஜந்தகுமார்*

முற்போக்கு எழுத்தாளர்களுள் மூத்தவராக மதிக்கப்படும் இவர் சரளமாகக் கதை சொல்வதில் வல்லமை பெற்றிருந்தார். சமூகப் பிரச்சினைகளுக்கே முக்கியத்துவம் கொடுத்தார். தொடர்கதைகளுக் குரிய சில பலஹீனங்களை இவருடைய சில நாவல்களில் தரிசிக்க முடிந்தாலும் அவளுக்கு ஒரு வேலை வேண்டும் மிகச் சிறந்த படைப்பு.

மரகதம் என்ற இதழையும் இவர் நடாத்தியிருந்தார். இளங்கீரன் நாவல்கள் மாத்திரமன்றி நாடகங்களையும் எழுதியுள்ளார். இந்த வகையில் கவிதை தந்த பரிசு, மஹாகவி பாரதி, நீதிக்காகச் செய்த அநீதி முதலான நாடகங்கள் முக்கியமானவை. இவரது நாடகங்கள் மேடையேற்றப்பட்டும் வானொலியில் ஒலிபரப்பப்பட்டும் உள்ளன. இவர் மிகச்சிறந்த பேச்சாளராகவும் விளங்கினார்.

பாரதி கண்ட சமுதாயம், பேராசிரியர் கைலாசபதி நினைவுகளும் கருத்துகளும், தேசிய இலக்கியமும் மரபுப் போராட்டமும் போன்ற குறிப்பிடத்தக்க நூல்களை இவர் எழுதியுள்ளார்.

இவரது இலக்கியப் பணியைக் கௌரவித்து இந்து கலாசார இராஜாங்க அமைச்சு ‘இலக்கியச் செம்மல்’ என்னும் விருதையும், முஸ்லிம் கலாசார அமைச்சு ‘இலக்கிய வேந்தர்’ என்னும் விருதையும், இலங்கை அரசு ‘விஸ்வப் பிரசாதினி’ என்ற விருதையும் வழங்கிக் கௌரவித்திருந்தன.

1996இல் இளங்கீரன் மறைந்தாலும் அவரது எழுத்துகள் அவரை வாழ வைக்கின்றன.

*த. அஜந்தகுமார்*

# நீலாவணன்

ஈழத்துத் தமிழ்க்கவிதை வளர்ச்சியில் நீலாவணன் குறிப்பிடத்தக்க ஆளுமையாக விளங்குகின்றார். பெரிய நீலாவணையிலே பிறந்த இவரது இயற்பெயர் சின்னத்துரை. தன்னுடைய ஊரின் பெயரை புனைபெயராகக் கொண்டு இலக்கிய உலகில் இவர் உலா வந்தார். நூற்றுக்கணக்கான கவிதைகளையும், வேளாண்மை என்னும் முடிவுறாத காப்பியத்தையும், மூன்று பா நாடகங்களையும், பல சிறுகதைகளையும் இவர் எழுதியுள்ளார். இவற்றைத் தவிர நாடகம், கட்டுரை, உருவக்கதை போன்ற முயற்சி களிலும் ஈடுபட்டிருந்தார். கவிதையே இவரது பிரதான வாகனமாக சிறப்புப் பெற்றது.

ஆரம்பகாலத்தில் மிக இனிமையான காதல் கவிதைகளைப் பாடிய நீலாவணன் 1960 இற்குப் பிறகு கிழக்கிலங்கை மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை முரண்பாடுகளைப் பாடினார். நீலாவணனின் இந்த சமூக விமர்சனம் சார்ந்த கவிதைகள் அவரது கவித்துவ ஆளுமையின் மிக முக்கிய சுவடுகளாகும். சமூக சமத்துவமின்மை, பொய்மைகள், போலித்தனங்கள், ஊழல்கள், வறுமை, சாதிப்பாகுபாடு, சீதனமுறை, நிறவெறி போன்றவற்றுக்கு எதிரான உணர்வுகளைத் தன் கவிதையில் வெளிப்படுத்தினார்.

சமூகத்தில் காணப்படும் குறைபாடுகளைக் கேலியும் கிண்டலுமாகக் கூறுவதில் இவர் வல்லவராக இருந்தார். இவரது உறவு, பாவம் வாத்தியார் போன்ற கவிதைகள் இதற்குத் தக்க சான்று. இவரது கவிதைகளின் அடுத்த கட்டமாக மறைஞானப் பாங்கான ஆத்மிகத் தேடல் மிக்க கவிதைகளைக் குறிப்பிடலாம். இவை இவரது இன்னுமொரு ஆளுமையைப் புலப்படுத்துகின்றன. பனிப்பாலை, தீ, பயண காவியம், போகவிடு, ஓ வண்டிக்காரா, ஒத்திகை, விளக்கு ஆகிய கவிதைகள் இத்தன்மை வாய்ந்தன. மு.பொ, யதார்த்தமும் ஆத்மார்த்தமும் என்ற கட்டுரையில் நீலாவணனின் ஆத்மிகக் கவிதைகள் குறித்து எழுதியுள்ளார். 'மழைக்கை' என்னும் நாடகத்தையும் இவர் மேடையேற்றியுள்ளார்.

இவரது கவிதைகள் அடங்கிய தொகுதிகளாக வழி, ஒத்திகை என்பன வெளிவந்துள்ளன. இவரது சிறுகதைகளும் நூலுருப்பெற்றுள்ளது. 'வேளாண்மை' என்னும் குறுங்காவியமும் நூலாகியுள்ளது. நீலாவணன்

*த. அஜந்தகுமார்*

குறித்து எஸ். பொ, சி. மௌனகுரு போன்றோர் நூல்களை வெளியிட்டுள்ளனர். எம். ஏ. நு.்.மான் இவரால் ஆகர்ஷிக்கப்பட்ட ஒருவர் என்பதால் இவரைக் குறித்துப் பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

1975 இல் நீலாவணன் மறைந்தார். இன்றும் ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாற்றில் மறக்கப்பட முடியாத ஆளுமையாக மிளிர்கின்றார்.

## கே. டானியல்

ஈழத்து தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் கே. டானியல் மிக முக்கியமான ஆளுமை ஆவார். ஆனைக்கோட்டையில் 1926இல் பிறந்த டானியல் அவர்கள் படிப்பறிவில் ஓங்கவில்லையென்றாலும் தன் பட்டறிவினால் இலக்கிய உலகில் வலம்வரத் தொடங்கினார். 1948இல் தூதன் பத்திரிகையில் இவரது முதல் கதையான சோதனையின் கொடுமை அல்லது பழிக்குப்பழி என்ற சிறுகதை வெளிவந்தது. டானியலின் முதல் நாவலான 'நெடுந்தூரம்' வீரகேசரி வார வெளியீட்டில் தொடராக வெளிவந்தது. டானியல் முற்போக்கு இயக்கத்தில் அதன் ஓட்டத்தோடு இசைவாக்கி கொண்டார். எழுத்தாளராகவும் சமூகப் போராளியாகவும் இலங்கியவர். தலித் இலக்கிய முன்னோடி என்று சிறப்பிக்கப்படும் அளவுக்கு தமிழகத்திலும் ஈழத்திலும் பெருமதிப்பு பெற்றவர். மக்கள் கலை இலக்கிய பெருமன்றம் என்ற அமைப்பின் அமைப்பாளராகவும் அது வெளியிட்ட மக்கள் இலக்கியம் என்ற இதழ் வருகையிலும் அதன் செயற்பாட்டிலும் முக்கிய பங்காற்றியவர்.

டானியல் தன்னுடைய நாவல்களாலும் குறுநாவல்களாலும் சிறுகதைகளாலும் மதிக்கப்படுகின்ற ஒருவர். இவருடைய சிறுகதைகள் 1963இல் டானியல் கதைகள் என்றும் 1975இல் உலகங்கள் வெல்லப்படுகின்றன என்றும் இரு தொகுதிகளாக வெளிவந்தன. 1975 இற்கான சாகித்திய மண்டலப் பரிசு உலகங்கள் வெல்லப்படுகின்றன என்ற தொகுதிக்கு கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

இவரது இலக்கியப் படைப்புகளில் நாவல்களே உயர்வானவை என்று பேசப்படும் அளவுக்கு பஞ்சமர் (முதலாம், இரண்டாம் பாகங்கள்), போராளிகள் காத்திருக்கின்றனர், கோவிந்தன், அடிமைகள், கானல், தண்ணீர், பஞ்ச கோணங்கள் போன்ற நாவல்கள் முக்கியமானவை.

இவரது தண்ணீர் நாவலுக்கு 1986இல் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. ஆனால் பெறுவதற்கு அவர் உயிரோடு இருக்கவில்லை.

இவரது குறுநாவல்கள்; பூமரங்கள், கே. டானியலின் குறுநாவல்கள் என்ற பெயர்களில் வெளிவந்துள்ளன. கே. டானியலின் குறுநாவல்கள் என்ற தொகுதியில் முருங்கையிலைக் கஞ்சி, இருளின் கதிர்கள், மையக் குறி போன்ற குறுநாவல்கள் அடங்கியிருந்தன.

இவரது நாவல்கள் நாட்டார் பண்பாட்டு ஆவணங்கள் என்று சொல்லத்தக்க வகையில் கிராமிய மணங்கமழும் மக்களின் வாழ்வியற் கோலங்களை அவர்களின் பிரச்சினைகளோடு எடுத்துரைத்தன ஆகும். இவரது நாவல்களில் பேச்சுவழக்கு மிக அழகாக இழையோடி நிற்கும். தாழ்த்தப்பட்ட மக்களின் குரலாக ஓங்கி ஒலித்த டானியலின் படைப்புக்கள் ஈழத்து இலக்கியப் பாதைக்கு வலுச்சேர்ப்பன ஆகும்.

## அரசகேசரி

ஆரிய சக்கரவர்த்திகள் குலத்திலே தோன்றிய புலவனாக அரசகேசரி ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் கவனம் பெறுகின்றான். கி.பி 1591 முதல் 1616 வரை யாழ்ப்பாணத்தில் அரசாண்ட எதிர்மன்னசிங்கம் என்ற எட்டாம் பரராசசேகரின் சகோதரன் என்று போர்த்துக்கேய சரித்திர ஆசிரியர் குவேறோசும், அம்மன்னனது மருமகன் என்று யாழ்ப்பாண வைபவ மாலை ஆசிரியரும் விவரிப்பர். மருமகன் என்பதே பெருவழக்காக உள்ளது.

அரசகேசரி இலக்கிய இலக்கணப் புலமையும் வடமொழிப் புலமையும் கொண்டவனாக விளங்கினான். நல்லூரில் நூல்நிலையம் ஒன்றை பரராஜசேகரனும் இவனும் சேர்ந்து அமைத்தார்கள் என்பதன் மூலம் இவனின் இலக்கிய ஆர்வமும் புலனாகின்றது.

அரசகேசரி ஆக்கிய நூலாக இரகுவம்சம் விளங்குகின்றது. இது இவனின் புலமையின் உரைகல்லாக பெருமை பெறுகின்றது. இவரது இரகுவம்சமே ஈழத்தில் எழுந்த முதல் காவிய நடையமைந்த நூலாகும். வடமொழியிலே காளிதாஸ மகாகவி இயற்றிய இரகுவம்சம் என்னும் காவியத்தின் தமிழாக்கமே இந்நூலாகும்.